சுருக்கம்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் – முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – திட்ட பயனாளிகளுக்கும், பொது மக்களுக்கும் தனியார் மருத்துவமனை மற்றும் பரிசோதனை மையங்களில் கோவிட்–19 பரிசோதனை கட்டணம் குறைத்து நிர்ணயம் செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (அஉ_தி–1) துறை

அரசாணை (நிலை) எண்.513

நாள்: 16.11.2021
திருவள்ளுவராண்டு 2052
பிலவ, ஐப்பசி – 30

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.240, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 05.06.2020.
2. அரசாணை (நிலை) எண்.290, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 03.08.2020.
3. அரசாணை (நிலை) எண்.433, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 28.10.2020.
4. அரசாணை (நிலை) எண்.578, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 29.12.2020.
5. அரசாணை (நிலை) எண்.231, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 07.05.2021.
6. அரசாணை (நிலை) எண்.247, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉ_தி–1) துறை, நாள் 19.05.2021.

மேலும் படிக்கப்பட்டது

7. தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கடித எண். 1887/த.நாசுதி/காப்பீடு/2020, நாள் 21.10.2021.

*****

ஆணை:

தமிழக அரசு அனைத்து மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன், ஒருங்கிணைந்த முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இலவச மருத்துவ சேவைகளை செயல்படுத்தி வருகிறது.

2. உலக சுகாதார அமைப்பு, தற்போதுள்ள கோவிட் தொற்று பாதிப்பினை உலகளாவிய பொது சுகாதார பேரிடராகவும், இதனைக் கட்டுப்படுத்தக் கூடிய நிகழ்வாகவும் அறிவித்துள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாடு அரசும் பொது சுகாதார சட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் இந்த கோவிட்–19 தொற்று பட்டியலிடப்பட்ட நோயாக அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. மேலும், இந்த

கோவிட்-19 தொற்று பரவலைத் தடுக்கும் நோக்குடன் பெருவாரியாக பரவும் தொற்றுச் சட்டம் 1897-ன்படி வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005ன் படியும், கோவிட்-19 தொற்று முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு வழிகாட்டு முறைகளும் வெளியிடப்பட்டுள்ளன .

3. தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் அவர்கள், கோவிட்-19 தொற்று சிகிச்சைக் கட்டணம் குறித்து உயர்மட்ட சிறப்பு குழு கூட்டம் 08.10.2021 அன்று நடைபெற்றது என குறிப்பிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை தலைவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர், கோவிட்-19 RT-PCR பரிசோதனைக்கான கட்டணத்தை குறைத்து, பின்வரும் கருத்துருவினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

அ) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கோவிட் தொற்றினை உறுதிப்படுத்தும் RT-PCR பரிசோதனை செய்வதற்கான கட்டணம் ரூ.550/- லிருந்து ரூ.400/- எனவும், குழு மாதிரிகளுக்கு (Pooled Samples) ரூ.400/-லிருந்து ரூ.150/- எனவும் குறைத்து நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆ) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாதவர்கள், தனியார் ஆய்வுக் கூடங்களில் RT-PCR பரிசோதனை செய்வதற்கான கட்டணம் ரூ.900/-லிருந்து ரூ.700/- என குறைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் வீட்டிற்கு சென்று பரிசோதனை செய்வதற்கு கூடுதலாக ரூ.300/- கட்டணம் (மாற்றமின்றி) நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இ) உயர் சிறப்பு குழு கூட்டம் நடைபெற்ற 08.10.2021 முதல் மேற்கூறிய கட்டண நிர்ணயத்தினை செயல்படுத்த உரிய அரசாணை வெளியிடக் கோருதல்.

4. மேற்காணும் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்து மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட கோவிட்-19 தொற்று உறுதிப்படுத்தும் RT-PCR கட்டணத்தை கீழ்கண்டவாறு குறைத்து நிர்ணயம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

அ) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கோவிட் தொற்றினை உறுதிப்படுத்தும் RT-PCR பரிசோதனை செய்வதற்கான கட்டணம் ரூ.550/- லிருந்து ரூ.400/- எனவும், குழு மாதிரிகளுக்கு (Pooled Samples) ரூ.400/-லிருந்து ரூ.150/- எனவும் குறைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆ) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாதவர்கள், தனியார் ஆய்வுக் கூடங்களில் RT-PCR பரிசோதனை

செய்வதற்கான கட்டணம் 900/–லிருந்து ரூ.700/– என குறைத்து நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் வீட்டிற்கு சென்று பரிசோதனை செய்வதற்கு கூடுதலாக ரூ.300/– கட்டணம் (மாற்றமின்றி) நிர்ணயம் செய்யப்படுகிறது.

இ) மேற்கூறிய கட்டண நிர்ணயத்தினை செயல்படுத்தும் இந்த அரசாணையானது உயர் சிறப்பு குழுவின் கூட்டம் நடைபெற்ற நாளான 08.10.2021 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ.ராதாகிருஷ்ணன்.
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–6.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை–6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை–6.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை–8.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர்,.சென்னை – 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 18.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.

**நகல்:**

சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சுகாதாரம்–2) துறை, சென்னை–9.
மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (தகவுப் பிரிவு/அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17.11.2021.
பிரிவு அலுவலர்
17/11/21